**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 329/2023 P.W. 6/L.W. 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | டாக்டர். திரு. இளையசெல்வன் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 03.09.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் இராஜாக்கமங்கலத்தில் பி.பி. எம் மருத்துவமனை நடத்தி வருகிறேன். அதில் நான் எலும்பு முறிவு சிகிட்சைப்பிரிவில் பணியாற்றி வருகிறேன். 01.07.2023 ம் தேதி மாலை 03.57 மணிக்கு 50 வயதுடைய நீலகண்டபிள்ளை என்பவர் தன்னை தெரிந்த நபர் கல் மற்றும் கம்பால் மதியம்03.00 மணி அளவில் சரல் அருகே வைத்து தாக்கியதால் காயம் ஏற்பட்டதாக கூறி சிகிட்சைக்காக உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அவரை பரிசோதித்துப்பார்த்தபோது கீழ் கண்ட காயங்கள் காணப்பட்டன.

காயம் 1. வீக்கம் மற்றும் தொடும் போது வலி மற்றும் கோணலாக வலது கால் முட்டியின் கீழ் பகுதியில் காணப்பட்டது.

காயம் 2. வீக்கம் மற்றும் தொடும்போது வலி முதுகு பகுதியின் மேல்பகுதியில் காணப்பட்டது.

மேலும் மேற்கண்ட காயங்களுக்கு எக்ஸ்ரே எடுத்துப் பார்த்ததில காயம் எண் 1 ல் திபியா, பிபுலா எலும்புகள் உடைந்து காணப்பட்டது. உடைந்த எலும்புகளுக்கு அறுவை சிகிட்சை செய்து சிகிட்சை அளிக்கப்பட்டது. அவர் 09.07.2023 ம் தேதி மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் 1 கொடுங்காயம் என்றும், காயம் 2 சாதாரண காயம்

என்றும் சான்று அளித்தேன். **நான் வழங்கிய காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u> :

காயம்பட்ட நபருடன் மருத்துவமனைக்கு அவருடைய நண்பர் ஒருவர் வந்திருந்தார். நண்பர் வந்திருந்தார் என்பதை மேற்படி காயச்சான்றிதழில் குறிப்பிட்டேனா என்றால் இல்லை. காயம்பட்ட நபர் என்னிடம் கம்பாலும், கல்லாலும் தாக்கியதாக என்னிடம் சொல்லியுள்ளரா என்றால் - ஆம் சொல்லியுள்ளார்.

2. காயம்பட்ட நபர் ஓடும்போது கரடுமுரடான இடத்தில் விழும்போது மேற்படி காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் உள்ளது. காயம்பட்ட நபர் அவர்பணி நிமித்தமாக மரங்களில் இருக்கும்போது மேற்படி 2 வது காயம் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் இல்லை. வலி இல்லாமல் கூட வலி இருப்பதாக பாவனையாக சொல்லலாம் என்றால் சரிதான். காயம்பட்ட நபர் நெஞ்சில் காயம் இருந்ததாக என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். நானும் காயம்பட்ட நபரும் ஓரே ஊர்காரர்கள் என்றால் சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபரும் ஓரே ஊர்காரர் தான். நாங்கள் ஓரே பள்ளியில் படித்தோம் என்றால் சரியல்ல.

3. மேற்படி காயம்பட்ட நபருக்கு இந்த சம்பவத்திற்கு சிறிது காலத்திற்கு முன்பு காலில் காயம் ஏற்பட்டு அவருக்கு அறுவை சிகிட்சை செய்யப்பட்டது என்றால் சரிதான். காயம்பட்ட நபர் எனக்கு வேண்டப்பட்ட நபர் என்பதால் அவருக்கு ஏற்பட்ட 1வது காயம் கொடுங்காயம் என்று சான்று அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.